தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## முகாமைத்துவ உதவியாளர் — பதவிகளின் எண்ணிக்கை: 10

சேவைப் பிரிவு: **MA 1-1**

## பதவியின் தன்மை

- ஆவண முகாமைத்துவம் மற்றும் ஆவணக்காப்பக நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
- சாதாரண நிர்வாக மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
- பணியாட்டொகுதி மற்றும் மனித வள நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
- நிதி, உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
- தரவு முறைமைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
- பொருட் கட்டுப்பாடு மற்றும் களஞ்சிய முகாமைத்துவத்திற்கு உதவுதல்.
- பணிப்பாளர் நாயகம், பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

## தகைமைகள் (கீழ்வரும் 1 அல்லது 2)

**(அ) கல்விப் பொதுத் தராதரச் (சாதாரண தர) பரீட்சையில்:**

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

i. சிங்களம் / தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரச் (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்குரிய பிரத்தியேகமான ஏனைய அவசியமான தகைமைகள்:-

- கணினிப் பிரயோகப் பயன்பாடு தொடர்பில் மூன்று (03) மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைப் பயின்று சித்தியடைந்திருத்தல்.

## வயதெல்லை

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

---

## சம்பள அளவுத்திட்டம்

**MA 1-1 - 2025 – ரூ. (46,220 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 - 83,390)**

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED